மதுரை கல்வி மாவட்டம்
காலாண்டுத் தேர்வு - செப்டம்பர் **22**

10 தமிழ். மதிப்பெண் 100

1.ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
2. ஆ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
3. இ) குறிஞ்சி, மருதம் நெய்தல் நிலங்கள்
4. ஈ) இலா
5. அ) அருமை + துணை
6. இ) வேற்றுமை உருபு
7. ஆ) உவமையணி
8. ஆ) 3, 1, 4, 2
9. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
10. ஈ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு
11. அ) சண்முக சுந்தரம்
12. இ) கருவர், உரு அறி
13. அ) கீரந்தையார்
14. ஈ) வானம்
15. ஆ) அடுக்குத் தொடர்

பகுதி **II**

16. அ) காடும் காடு சார்ந்த இடமும் எந்த நிலப்பகுதிக்குரிய முதற்பொருள் ஆகும்?
ஆ) எங்கிருந்து வீசும் காற்றை கொண்டல் என்பர்?

17.'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

18. வினா எத்தனை வகைப்படும் அவை யாவை?
அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா, என்று வினா ஆறு வகைப்படும்

19. வசன கவிதை – குறிப்பு வரைக.
உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும். கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்.
தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

20. மொழிபெயர்ப்பு குறித்து மணவை முஸ்தபா கூறுவது யாது?
ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை, வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா.

21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம். இல்லாத கண்.

22. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

விடை:

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம்– இன்னிசை அளபெடை

23.மலை - மாலை
மலையேறும் போது மாலை நேரமாகிவிட்டது .

24.கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்.முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

உழவர்கள் வயலில் உழுதனர்.
நெய்தல்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர்கள் கடலுக்குச் சென்றனர்.

25. பகுபத உறுப்பில் கணம்
வருக - வா (வரு) + க. வா - பகுதி, வரு - விகாரம், க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

26. கலைச்சொற்கள் தருக.
Conversion - உரையாடல். Space Technology - விண்வெளி தொழில்நுட்பம்

27. அ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைபட்டது.
28. புதிய சொற்களை உருவாக்குக.
தேன் மழை, மணிமேகலை, பொன் விலங்கு, பூ விலங்கு, வான்மழை, பொன்மணி

பகுதி - III

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

பிள்ளை – தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன் .
வடலி – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.
நாற்று – நெல் நாற்று நட்டேன்.
கன்று – வாழைக்கன்று நட்டேன்.
பைங்கூழ் – சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்தவில்லை.
அது மனிதனுக்குரியத் தேவைகளை மட்டுமே மேம்படுத்தி இருக்கிறது.
அறிவியலால் இன்று மனிதன் மனிதனாக வாழவில்லை .
இயந்திரம் மனிதனாகிவிட்டது. மனிதன் இயந்திரம் ஆகிவிட்டான்.
மனிதநேயத்தையும் அன்பையும் இரக்கத்தையும் இன்றைய மனிதனிடம் பார்க்க முடியவில்லை.
பணிகளால் அவன் எந்திரத்தைப் போல ஓடிக்கொண்டே உள்ளான்.

31. உரைப்பகுதிக்கான விடை.
அ) ஓசோன் படலம்.
ஆ) கதிரவனிடமிருந்து வரும் புற ஊதா கதிர்களைத் தடுக்கும் அரணாக இருக்கின்றது.
இ) குளோரோ புளோரா கார்பன்.

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலமும் மேவதால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

33. மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

உடலில் ஏற்பட்ட புண் :
மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.
நீங்காத துன்பம் :
வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் (நோயாளியைப் போல) உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன்

34. நீதிவெண்பா
அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.
முல்லைப்பாட்டு
சிறுதாம்பு தொடித்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, இம்மக்கள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவார், தாயர்" என்போம்
நன்னர் நன்மொழி கேட்டனம்

35. வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு. குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
அணி இலக்கணம் :

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு
வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.
உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.
உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.
உவம உருபு : போல (வெளிப்படை)

விளக்கம் : ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது ஆகும்.

36. பொருள்கோள்
கொண்டு கூட்டுப் பொருள்கோள்:
ஒரு செய்யுலில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடு ஒன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள்.
விளக்கம்: பாடலில் ஆழத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துல குவளை என்று கருத்தைக் கொண்டு அங்கும் இங்கும் கொண்டு பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

37. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.
மல்லிகைப்பூ
இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
மல்லிகை என்னும் பூ (மல்லிகை – சிறப்புப் பெயர், பூ – பொதுப் பெயர்)
பூங்கொடி
உவமைத் தொகை
பூ போன்ற கொடி
தண்ணீர்த் தொட்டியில்
இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
தண்ணீரை ஊற்றும் தொட்டி
குடிநீர் நிரப்பினாள்.
இரண்டாம் வேற்றுமைத் தொகை
குடிநீரை நிரப்பினாள்.

பகுதி IV

38. அ) திருவிளையாடல் புராணம் சுருக்கமாக எழுதல்.
ஆ) முல்லைப்பாட்டு செய்தியை சுருக்கமாக எழுதுதல்
39. ஆ) வாழ்த்து மடல்.

அன்புள்ள நண்பன் அரசுக்கு,
உன் உயிர் நண்பன் எழுதுவது. நலம் நலமறிய ஆவல்,
நேற்றைய நாளிதழில் ‘மரம் இயற்கையின் வரம்’ என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு முதல் பரிசு


பெற்றதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நாளிதழிலும் அக்கட்டுரை வெளிவந்திருந்தது. அதனைப் படித்துப் பார்த்தோம். நீ எழுதிய சொற்கள் விழிப்படையச் செய்துவிட்டது. நாங்களும் எங்கள் பகுதியில் மரங்களை நட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டோம்.நீயும் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு பல சாதனைகளைச் செய்து வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைத் தேடித்தர மனதார உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
உன் உயிர் நண்பன்,
மணி .

உறைமேல் முகவரி:
பெறுநர்:

அரசு,
1, கம்பன் தெரு,
பாரதி நகர்,
அஅஅ.

40. காட்சியைக் கவினுற எழுதுக.



அறிவை பூட்டி வைக்காதே!
அறியாமை இருளில்தலைகுனியாதே!
அறிவு பூட்டை திறந்திடு!
அறம் பொருள் இன்பம் கற்றிடு!
அவனியில் உயர்ந்து சிறந்திடு!

41. நூலக உறுப்பினர் படிவம்

விருதுநகர் மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை /ஊர்ப்புற நூலகம். மாவட்ட மையநூலகம்

அட்டை எண் : 12345 உறுப்பினர் எண்: 200
பெயர் - : ஜெய்சங்கர்
தந்தை பெயர். : சீனிவாசன்
பிறந்த தேதி. : 01.01.2006
வயது. : 15
படிப்பு. : பத்தாம் வகுப்பு
தொலைபேசி எண் : 0987654321
அஞ்சல் முகவரி - : 32/1, காந்தி வீதி,
இராஜபாளையம்,
விருதுநகர்,

நான் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 50 சந்தா தொகை ரூ 50 ஆக மொத்தம் ரூ 100 ரொக்கமாகச் செலுத்துகிறேன்.நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: விருதுநகர்
நாள்: 23/09/2022

42. ஆ) மதிப்பிற்குறிய சகோதர சகோதரிகளே ! என் பெயர் இளங்கோவன் . நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன் . நான் நமது தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி சில வார்த்தைகள் இங்கே கூறுவதற்கு வந்துள்ளேன் . தமிழர்கள் கலாச்சாரத்திலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கியதாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்க இலக்கியங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது . தமிழர்கள் மொழிக்கு இலக்கணம் வகுத்ததைப் போலவே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர் . தமிழ்ப் பண்பாடு இந்தியா , இலங்கை , மலேசியா , சிங்கப்பூர், இங்கிலாந்து என உலகளாவிய தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் வேரூன்றியுள்ளது . நமது பண்பாடு மிகவும் பழமையானது என்றாலும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது . நாம் நமது கலாச்சாரத்தை பற்றிப் பெருமை கொள்வோம் .

அனைவருக்கும் நன்றி .

பகுதி **V (**மதிப்பெண் **24)**

43 . உரைநடை வினா
44. துணைப் பாடம்
45. கட்டுரை

ஞா.ஜோ. அந்தோனி பிரகாஷ்,
தமிழாசிரியர்,
தொன் போஸ்கோ மேல்நிலைப்பள்ளி,
மதுரை.